தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 18, திருவள்ளுவர் ஆண்டு2049

2018 ஜூன் 1, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.”

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல் நீதி நூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

மேல்நிலைப் பள்ளி

***13054—திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, கடையநேரியில் உள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, கடையநேரியில் உள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

பகுதிநேர நியாய விலைக் கடை

***13978—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதி, மூலனூர் கண்ணிவாடி பேரூராட்சி, மொங்கநல்லம்பாளையத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் மொங்கநல்லம்பாளையம் பகுதியைச் சேர்ந்த 240 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 525 குடும்ப அட்டைகளுடன் எரச்சப்பாடி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரசின் நிபந்தனையின்படி, புதிய பகுதிநேரக் கடை திறக்கும்போது, பிரிவினைக்குப்பின் தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்நேர்வில், பிரிவினைக்குப்பின் 285 குடும்ப அட்டைகளே உள்ளன. எனவே, மொங்கநல்லம்பாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை